(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 51.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 பெப்ரவரி 09, செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

28/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் இனம் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நோயைத் தடுப்பதற்கு தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ள செயன்முறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

136/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இலங்கை முழுவதிலும் இடம்பெற்றுள்ள மின்சாரத் தடைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மின்தடைகள் இடம்பெற்ற திகதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மின்தடைகளின் பின்னர் நியமனம் செய்யப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி குழுக்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கைக்கு 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க அமைச்சு வசமுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

231/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மிருகக் கொழுப்பு / மரக்கறி எண்ணெய்யின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மிருகக் கொழுப்பு / மரக்கறி எண்ணெய் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மிருகக் கொழுப்பு மற்றும் மரக்கறி எண்ணெய் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மிருகக் கொழுப்பு மற்றும் மரக்கறி எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

318/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உதைப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் உதைப்பந்தாட்டத் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உதைப்பந்தாட்ட விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

530/2020

கௌரவ ரோஹன பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண சபையினால் நிர்வாகம் செய்யப்படும் வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்குமென அனுமதிக்கப்பட்ட வைத்திய அலுவலர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் தற்போது பணியாற்றும் வைத்திய அதிகாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அனுராதபுரம் மாவட்ட வைத்தியசாலைகளில் நிலவும் வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

563/2020

கௌரவ சாந்த பண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் நிலவும் யானை - மனித மோதல் காரணமாக மனித உயிர்கள் மற்றும் சொத்துக்கள் அழிவடைகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) காட்டு யானைகள் தாக்கியதன் மூலம் 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட மனித உயிரிழப்புக்கள் மாகாண ரீதியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) தற்போது ஒரு மனித உயிரிழப்புக்காக செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டினுள் சேதமடைந்த சொத்துக்களுக்காக செலுத்தப்பட்டுள்ள மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) காட்டு யானை அச்சுறுத்தலில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

582/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்களை மறுசீரமைக்கும் திட்டமொன்று 1992 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(ii) அச்சந்தர்ப்பத்தில் 22 பிராந்திய தோட்டக் கம்பனிகளுக்கு அரசாங்கத் தோட்டங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனிகளில் அநேகமான கம்பனிகள் தமது குத்தகை உரிமையினை வேறு நிறுவனங்களுக்கு தற்போது அளித்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரச தோட்டங்களை குத்தகைக்குப் பெற்ற தோட்டக் கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தோட்டங்கள் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்ப கம்பனிகளிடமிருந்து குத்தகை உரிமையினைப் பெற்றுக்கொண்டு தற்பொழுது தோட்டங்களை நிருவகிக்கின்ற நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆரம்ப குத்தகைக்காரருக்கு அவர்கள் பெற்றுக்கொண்ட அரசாங்கத் தோட்டங்களை இதர நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி குத்தகை தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

596/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவின் அனலைத்தீவில் அமைந்துள்ள ஒரேயொரு வைத்தியசாலையான அனலைத்தீவு வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான விபரம் யாது என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைக்கென இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்,

(iii) வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமை காரணமாக அனலைத்தீவில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்குவதற்காக நெடுந்தீவு வைத்தியசாலையில் காணப்படுகின்ற பதவியணி வெற்றிடங்கள் எத்திகதியில் நிரப்பப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

604/2020

கௌரவ இஷாக் ரஹுமான் ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தின் மஹாஇலுப்பல்லமவில் அமைந்துள்ள களப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்குச் சொந்தமான முழு நிரப்பரப்பின் அளவு;

(ii) அவற்றில் விதை உற்பத்தி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iii) கள ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iv) பண்ணை பொறித்தொகுதி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(v) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப் பரப்பின் அளவு;

ஏக்கர்களில் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப்பரப்பினை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

637/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள குளங்களுக்குரிய கருத்திட்டம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்கள் கடந்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி குளங்கள் மறுசீரமைக்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டில் மறுசீரமைப்பதற்கு தேர்ந்தேடுக்கப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, விவாக (பொது) கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, முஸ்லிம் திருமணம், மணநீக்கச் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தொழில் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 06 ஆம் திகதிய 2209/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.